தமிழக காவல்துறையில்

டிஜிபி முதல் காவலர் வரை அனைவருக்கும் காவல்துறை சின்னம் அடங்கிய புதிய நீலநிற அடையாளப் பட்டை

ஸ்டாலின் விரைவில் அறிமுகப்படுத்துகிறார்



சென்னை, ஜூலை. 27–

தமிழக காவல்துறையில் முதல்முறையாக கான்ஸ்டபிள் முதல் டிஜிபி வரை அனைவரது யூனிபார்மிலும் நீல நிறத்திலான ஒரே மாதிரியான காவல்துறை சின்னம் அடங்கிய அடையாளப்பட்டை இடம்பெற உள்ளது. முதலமைச்சர் ஸ்டாலின் அதனை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளார்.

தமிழ்நாட்டில் காவலர் முதல் டிஜிபி வரை அனைவருக்கும் காக்கி நிற சீருடை வழங்கப்பட்டுள்ளது. இதில் கான்ஸ்டபிள், தலைமைக்காவலர், சிறப்பு எஸ்ஐ, நேரடி எஸ்ஐ, இன்ஸ்பெக்டர் மற்றும் டிஎஸ்பி, ஏடிஎஸ்பி முதல் ஐஜி, டிஐஜி. டிஜிபி வரையில் ஒவ்வொருவருக்கும் அவரவர் அதிகார எல்லைக்கு தகுந்தாள் போல் யூனிபார்ம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். அதன்படி, டிஜிபியின் தோள்பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம், காலரில் ரிப்பன் இருக்கும். அதே போல ஏடிஜிபியின் யூனிபார்மில் தோள்பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம் இருக்கும்.

மேலும் இதேபோல இன்ஸ்பெக்டர்கள் யூனிபார்மில் தோள்பட்டையில் தமிழ்நாடு போலீஸ் என்ற எழுத்து, மஞ்சள் கயிறு, 3 ஸ்டார்கள் இருக்கும். எஸ்ஐக்களுக்கு இரண்டு ஸ்டாரும், தலைமைக் காவலருக்கு 3 பட்டைகள் இருக்கும். இவ்வாறு, காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் முதல் டிஜிபி வரை, அனைத்துப் பிரிவு போலீஸாரின் நிலையைக் குறிக்கும் வகையில் யூனிபார்மில் லோகோ அமைந்திருக்கும். ஆனாலும் ஒட்டு மொத்த தமிழக காவல்துறை என்பதைக் குறிக்கும் வகையில், தமிழக போலீஸாரின் சீருடையில் எந்த அடையாளமும் இல்லை.

எனவே, வடக்கு மாநிலங்களில் உள்ளதைப் போல மாநிலப் பெயரைக் குறிக்கும் வகையில், காவலர் சீருடையில் ஒரே மாதிரியான அடையாளம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை காவலர்கள் சார்பில் விடுக்கப்பட்டு வந்தது. அது தொடர்பாக அரசும் ஆலோசனை நடத்தி வந்தது.

முதலமைச்சர் ஸ்டாலின் அறிமுகப்படுத்துகிறார்

இந்நிலையில், தமிழக காவல் துறையில் முதல்முறையாக காவலர் முதல் டிஜிபி வரை அனைவரது சீருடையிலும் ஒரே மாதிரியான அடையாள 'லோகோ' இடம் பெற உள்ளது. அதில், ஸ்ரீவில்லிப்புத்தூர் கோபுரம், அசோக சின்னம், தேசியக் கொடி உள்ளிட்டவற்றுடன், 'தமிழ்நாடு காவல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள அடையாளச் சின்னங்களுடன் கூடுதலாக இந்த லோகோவும் இடம்பெறும். வருகிற ஆகஸ்ட் மாதம் முதல் இந்த லோகோ, தமிழக போலீஸார் அனைவரின் சீருடையின் இடது கை பகுதியில் இடம்பெறவுள்ளது. இதனை முதலமைச்சர் ஸ்டாலின் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளார்.

தமிழக காவல்துறை ஏடிஜிபி சஞ்சய் குமார் தலைமையில் இயங்கி வரும் நவீனமயமாக்கல் பிரிவு ஏறத்தாழ 100 லோகோக்களுக்கு மேல் தயாரித்து, அவற்றை கூர்ந்து ஆராய்ந்து, அவற்றில் ஒன்றை தேர்வு செய்ததாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. திருப்பூரில் தயாரான இந்த லோகோவை, போலீஸார் சீருடையில் ஒட்டிக்கொள்ளலாம். அல்லது குத்திக் கொள்ளலாம் என்றும் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் புதிய விமான நிலையத்தை எங்கே அமைப்பது? மத்திய அமைச்சருடன் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆலோசனை

புதுடெல்லி, ஜூலை.27

சென்னையில் புதிய விமான நிலையத்தை பன்னூரில் அமைப்பதா? பரந்தூரில் அமைப்பதா? என்பது குறித்து மத்திய மந்திரியுடன் தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று ஆலோசனை நடத்தினார்.

தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு டெல்லி சென்றார். டெல்லியில் நேற்று அவர், சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியாவை சந்தித்து தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களின் மேம்பாட்டுக்கான கோரிக்கைகளை முன்வைத்தார்.

அப்போது தமிழக தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், தமிழக அரசு இல்ல உறைவிட ஆணையர் ஆசிஷ் சட்டர்ஜி ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த சந்திப்பு குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:

சிவில் விமான போக்குவரத்து மந்திரியிடம் பல்வேறு விஷயங்களை விவாதித்தோம். சென்னையில் புதிதாக பசுமை விமான நிலையம் அமைப்பதற்கான இடம் குறித்து விவாதித்தோம். ஏற்கனவே 4 இடங்களை தேர்வு செய்து விமான நிலைய ஆணையத்துக்கு அனுப்பியபோது அதில் கல்பாக்கம், தாம்பரம் ஏர்வேஸ் ஆகிய 2 இடங்கள் தகுதியாக இருக்காது என தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள பன்னூர் மற்றும் பரந்தூர் ஆகிய இடங்களில் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரியவந்தது.

இந்த 2 இடங்களுக்கான 'சைட் கிளியரன்ஸ்' பற்றி அமைச்சருடன் விவாதித்தோம். 'சைட் கிளியரன்ஸ்' தந்து விட்டால் முதலமைச்சரின் ஆலோசனைப்படி எந்த இடம் என முடிவு செய்து முன்மொழிவு கொடுப்போம்.

இதைப்போல கோவை, திருச்சி போன்ற தமிழகத்தில் உள்ள மற்ற விமான நிலையங்களின் விரிவாக்க பணிகள் குறித்தும் விவாதித்தோம். நில எடுப்பு பணிகள், பாதுகாப்புத்துறை இடங்கள் குறித்தும் ஆலோசித்தோம். சென்னை விமான நிலையத்தில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு வசதி அமைக்க இடம் ஒதுக்கித்தரவும் கேட்டு இருக்கிறோம். அதைப்போல கரூரில் விமான நிலையம் அமைக்கவும் கேட்கப்பட்டது. நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி தந்து இருக்கிறார்.

மதுரை விமான நிலையத்தை 24 மணிநேரமும் இயங்கக்கூடிய சர்வதேச விமான நிலையம் ஆக்க வேண்டும் என வலியுறுத்தி இருக்கிறோம். அங்கு விரிவாக்கப் பணிகளை பொறுத்தவரை ஏறக்குறைய 90 சதவீதம் முடிந்திருக்கிறது. மேலும், தமிழகத்தில் விமான பயிற்சிப்பள்ளி அமைக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. சேலம் விமான நிலையத்தில் அமைக்கலாமா? என்பது பற்றியும் ஆலோசித்தோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

சரக்கு வாகனங்களுக்கான பதிவுச்சான்று, தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டண உயர்வு

மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 27–

சரக்கு வாகனங்களுக்கான பதிவுச்சான்று மற்றும் தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணத்தை உயர்த்தி மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை எதிர்த்த வழக்கில் மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க சென்னை ஐ கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கனரக சரக்கு வாகனங்களுக்கான பதிவுச்சான்று மற்றும் தகுதிச்சான்றை புதுப்பிப்பதற்கான கட்டணத்தை 1,500 ரூபாயாகவும், நடுத்தர சரக்கு வாகனங்களுக்கான பதிவுச்சான்று மற்றும் தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம் 1,300 ரூபாயாகவும் உயர்த்தி மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம், 2021 அக்டோபரில் அறிவிக்கை வெளியிட்டது.

இதேபோல பதிவுச்சான்றை புதுப்பிக்க தாமதமாகும் ஒவ்வொரு மாதத்துக்கும் 500 ரூபாயும், தகுதிச்சான்று புதுப்பிக்க தாமதத்துக்கு நாள் ஒன்றுக்கு 50 ரூபாயும் கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் எனவும் அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு சரக்கு வாகன உரிமையாளர்களுக்கு பெருத்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறி, இதற்கு தடை விதிக்க வேண்டும் என தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் குமாரசாமி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், மத்திய அரசின் கட்டண உயர்வு மற்றும் கூடுதல் கட்டண அறிவிப்பு என்பது 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்களுக்கு மட்டும் விதிப்பது முற்றிலும் சட்டவிரோதமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு இதேபோல கூடுதல் கட்டண வசூல் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பை சென்னை ஐகோர்ட் ரத்து செய்துள்ளதாகவும், அனைத்து வாகனங்களுக்கும் பதிவுச்சான்று, தகுதிச் சான்று புதுப்பிக்க ஒரே நடைமுறையை பின்பற்றும் நிலையில் சரக்கு வாகனங்களுக்கு மட்டும் அதிக கட்டணம் வசூலிப்பது தன்னிச்சையானது என்பதால் இந்த அறிவிக்கையை ரத்து செய்ய வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த, நீதிபதிகள் துரைசாமி மற்றும் சுந்தர் மோகன் அமர்வு, ஆறு வாரங்களில் பதில்மனு தாக்கல் செய்யும்படி, மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டனர்.

புத்தொழில் சூழமைவிற்கான ஒன்றிய அரசின் "லீடர்" விருது: ஸ்டாலினிடம் காட்டி வாழ்த்து பெற்றார் அன்பரசன்

சென்னை, ஜூலை 27–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் இன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஒன்றிய அரசால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட 2021–ம் ஆண்டுக்கான புத்தொழில் சூழமைவிற்கான "லீடர்" விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

டெல்லியில் 4.7.2022 அன்று ஒன்றிய அரசின் தொழில் முன்னேற்றம் மற்றும் உள்நாட்டு வணிகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத்தில் புத்தொழில் சூழமைவினை வலுப்படுத்தும் நோக்கில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவான செயல்பாடுகளை முன்னெடுத்தற்காக தமிழ்நாட்டிற்கு லீடர் விருது வழங்கப்பட்டது. முந்தைய ஆண்டுகளில் புத்தொழில் சூழமைவில் வளர்ந்து வரும் மாநிலம் என்ற நிலையில் இருந்து தற்போது "லீடர்" நிலைக்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கத்தின் முன்னாள் இயக்குநரும், தற்போதைய நில நிர்வாக ஆணையருமான எஸ். நாகராஜன், தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கத்தின் முன்னாள் கூடுதல் இயக்குநரும், தற்போதைய செங்கல்பட்டு மாவட்ட சார் ஆட்சியருமான சஜீவனா, தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாமல்லபுரம் வந்த செஸ் ஒலிம்பியாட் ஜோதி: அமைச்சர்கள் உற்சாக வரவேற்பு

சென்னை, ஜூலை 27–

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்த செஸ் ஒலிம்பியாட் ஜோதி இந்தியாவில் 75 நகரங்களை சுற்றிவிட்டு இன்று காலை மாமல்லபுரம் வந்தடைந்தது. அமைச்சர்கள் மெய்யநாதன், தா.மோ. அன்பரசன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி நாளை (வியாழக்கிழமை) தொடங்கி அடுத்த மாதம் 10ந்தேதி வரை சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடக்கிறது. இந்த போட்டியில் 187 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செஸ் வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக செஸ் ஒலிம்பியாட் ஜோதி பயணத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி செஸ் ஒலிம்பியாட் ஜோதியை டெல்லியில் கடந்த மாதம் 19ந்தேதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

செஸ் ஒலிம்பியாட் ஜோதி பயணம் கடந்த மாதம் தொடங்கி இந்தியா முழுவதும் 75 நகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. தமிழ்நாட்டில் கோவை, சேலம், நெல்லை, கன்னியாகுமரி, தஞ்சை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு இந்த ஜோதி கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட செஸ் ஒலிம்பியாட் ஜோதி இன்று மாமல்லபுரம் வந்தடைந்தது.

40 நாட்களில் இந்தியாவில் 75 நகரங்களை கடந்து ஜோதி, செஸ் ஒலிம்பியாட் நடக்கும் மாமல்லபுரத்துக்கு வந்துள்ளது. செஸ் ஒலிம்பியாட் ஜோதியை விளையாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன், ஊரக தொழிற்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். செஸ் ஒலிம்பியாட் ஜோதிக்கு மாமல்லபுரம் நுழைவு வாயில் பகுதியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். ஒலிம்பியாட் ஜோதிக்கு மேளதாளங்கள் முழங்க பாரம்பரிய கலைகளுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அகில இந்திய செஸ் கூட்டமைப்பினர் ஜோதியைப் பெற்றுக் கொண்டனர்.

இன்று மாலை சென்னை வந்தடையும் ஒலிம்பியாட் ஜோதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக்கொள்கிறார். சென்னையில் இன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை செஸ் ஒலிம்பியாட் ஜோதி ஓட்டம் நடைபெறவுள்ளது. சென்னை மாநிலக் கல்லூரி மைதானத்தில் தொடங்கி, காமராஜர் சாலை, ராஜாஜி சாலை வழியாக பயணித்து நேரு விளையாட்டரங்கத்தில் நிறைவடைகிறது.

SUNDARAM MUTUAL

Notice – cum – Addendum to the Scheme Information Document / Key Information Memorandum / Statement of Additional Information to the schemes of Sundaram Mutual

Change in the address of Customer Care Centre:

Investors / Unit holders are advised to take note of the changes in the address of the Customer Care Centre of KFin Technologies Private Limited as stated below, which is an official point of acceptance of transactions for the Schemes of Sundaram Mutual Fund.

Existing Address	New Address (with effect from August 1, 2022)
H No 5, Purva Fran, Opp Syndicate Bank, Hapur Road, Meerut 250002.	Shop No:- 111, First Floor, Shivam Plaza, Near Canara Bank, Opposite Lves Petrol Pump, Meerut-250001, Uttar Pradesh, India.

All other terms and conditions of the Scheme Information Document(s) / Key Information Memorandum(s) /Statement of Additional Information will remain unchanged.

This addendum forms an integral part of the Scheme Information Document (SID) / Key Information Memorandum(KIM) / Statement of Additional Information (SAI) of the schemes of Sundaram Mutual Fund as amended from time to time.

For **Sundaram Asset Management Company Ltd**
R Ajith Kumar
Secretary & Compliance Officer

Place: Chennai
Date: July 27, 2022

For more information please contact:
Sundaram Asset Management Company Ltd
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615

Corporate Office: 1st & 2nd Floor, Sundaram Towers, 46, Whites Road,
Royapettah, Chennai-14.
Contact No. (India) 1860 425 7237, (NRI) -91 40 2345 2215
Fax: +91 44 2841 8108, www.sundarammutual.com
Regd. Office: No. 21, Patullos Road, Chennai 600 002.

FYI-22-23-19

Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

aban

அபான் ஆப்ஷோர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ''ஜனப்ரியா கிரஸ்ட்'', 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008.
Website: www.abanoffshore.com; Tel No.044-49060606; Fax:044-28195527 CIN:L01119TN1986PLC013473

பொது அறிவிப்பு

கம்பெனி பங்குதாரர்களின் 36வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) திங்கட்கிழமை, 26 செப்டம்பர் 2022 அன்று இந்திய நேரப்படி காலை 10.15 மணிக்கு காணொளி காட்சி ("VC")/பிற ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

உலகளாவிய COVID–19 தொற்றுநோயால் எழும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட (எம்சிஏ) ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020, மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட செபி சுற்றறிக்கை குறிப்பு எண் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11னால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின் கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டம் காணொளி காட்சி ("VC")/பிற ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது ஆகவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் நடைபெற உள்ள வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

12 மே 2020 தேதியிட்ட செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா வழங்கிய சுற்றறிக்கை தளர்வுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021–22 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை 22 ஜூலை 2022 அன்று அலுவல் நேரம் முடிவதற்குள் நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)/சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) டிலிருந்து பெறப்பட்ட பயனுள்ள உரிமையாளர்கள் பட்டியல்/உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் 26 ஜூலை 2022 அன்று அன்று மின்னணு வடிவத்தில் அனுப்பப்பட்டுள்ளது.வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021–22 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.com, நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) இணையதளம் www.evoting.nsdl.com, பிஎஸ்இ லிமிடெட் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருவதற்கான வழிமுறைகள் அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளன. VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103ன் கீழ் கோரத்தை கணக்கிடுவதற்கான நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன்படி, உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) மூலமாக வணிகத்தை பரிவர்த்தனை செய்வதற்கு மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு)வசதியை கம்பெனி அளிக்கிறது. கூடுதலாக, மின்னணு முறையின் மூலம் வாக்களிப்பதற்கான வசதியும் கூட்டத்தின்போது கிடைக்கும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காமல் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் கூட்டத்தில் வாக்களிக்க உரிமை உள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவிற்கான விரிவான நடைமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பதற்கு கட் ஆப் தேதியான 19 செப்டம்பர் 2022 அன்று உறுப்பினர்கள் பதிவேடு/டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது.

கட் ஆப் தேதியான 19 செப்டம்பர் 2022க்கு முன்பாக ஆனால் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான நபர் evoting.nsdl.comக்கு ஒரு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், "சுப்ரமணியன் பில்டிங்'', எண். 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை–600 002 Phone : +91 044 28460390 (5 lines); Fax :+91 044 28460129; Email : investor@cameoindia.comல் தொடர்பு கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, 23 செப்டம்பர் 2022 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை, 25 செப்டம்பர் 2022 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் (ஞாயிற்றுக்கிழமை, 25 செப்டம்பர் 2022 அன்று மாலை 5.00 மணி) மின்னணு முறையில் வாக்களிக்க முடியாது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை NSDL நிறுத்திவிடும்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/வாக்குப்பதிவிற்காக M/s. ஜி. ராமச்சந்திரன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், சென்னை அவர்கள் ஆராய்வாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை அந்தந்த டெபாசிட் பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் investor@cameoindia.comக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகம்/குறைகள் இருப்பின் அது குறித்து Ms. பல்லவி மத்ரே, மேலாளர், NSDL, 4வது மாடி, 'ஏ' விங், டிரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர். பரேல், மும்பை 400 013. மின்னஞ்சல்: evoting@nsdl.co.in /pallavid@nsdl.co.in, தொலைபேசி: 91 22 24994545 /1800–222–990ல் தொடர்பு கொள்ளலாம்.

(குழுவின் ஆணைப்படி)

S.N. பாலாஜி
உதவி பொது மேலாளர் (சட்டம்) மற்றும் செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 26.07.2022